## 50 சென்ட் மாதம் ரூ.30 ஆயிரம்…. பட்டதாரி இளைஞர்களின் பலே விவசாயம்..

**25.01.2013**

 

விவசாயிகளின் பிள்ளைகளே விவசாயத்தை மறந்து அல்லது துறை மாற நினைத்து… பன்னாட்டு நிறுவனங்களை நோக்கி படையெடுத்திருக்கும் நவீன யுகம் இது. இதற்கு நடுவே, விவசாயமே தெரியாத சிலர்… பன்னாட்டு நிறுவன வேலைகளை உதறிவிட்டு, விவசாயத்தைக் கையிலெடுக்கிறார்கள் என்றால்… ஆச்சர்யம்தானே!

சாஃப்ட்வேர் இன்ஜீனியர்கள், விஞ்ஞானி, கல்லூரிப் பேராசிரியர், வழக்கறிஞர், ஆடிட்டர், பொறியாளர்கள் என பல துறையைச் சேர்ந்த இவர்களை ஒன்று சேர்த்திருக்கிறது, இயற்கை விவசாயம். நல்ல கீரை என்கிற பெயரில் அமைப்பை உருவாக்கி, பயணத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். ஜெகன்னாதன், கௌதம், ராதாகிருஷ்ணன், சலோமிஏசுதாஸ், ராமு, விசு, திருமலை, புனிதா, ஷாம், சிவகுமார், ராஜமுருகன், அறிவரசன் ஆகிய 12 பட்டதாரி இளைஞர்கள்!

திருநின்றவூர் பெரியப்பாளையம் பிரதான சாலையில், ஐந்தாவது கிலோ மீட்டரில் பாக்கம் என்னும் கிராமம் உள்ளது. இங்கு இந்த அமைப்பினர், இயற்கை முறையில் கீரை சாகுபடி செய்து… சென்னையில் நேரடியாக சந்தைப்படுத்தி வருகிறார்கள்.

முதலில் பேச ஆரம்பித்த ஜெகன்னாதன், கிராமப் பொருளாதாரத்தைப் பற்றி அடிக்கடி நான் சிந்திப்பேன். அதனுடன் தொடர்ச்சியாக, கிராம மக்களிடம் சர்வே செய்தேன். 240 குடும்பங்களிடம் ஆய்வு செய்ததில்.. செயற்கை உரம், பூச்சிக் கொல்லி, மது பானங்கள், புகையிலை என்று வருடத்திற்கு 1 கோடியே 60 லட்ச ரூபாயைச் செலவு செய்றாங்க என்று தெரிந்தது. படாதபாடுபட்டு இந்தக் குடும்பங்கள் சம்பாதிக்கும் பணம்… சம்பந்தமில்லாத யாருக்கோ போவதை நினைக்கும் போது… மிகவும் வருத்தமாக இருந்தது.

இந்தச் செலவைக் குறைப்பதற்கும், இவர்களை இதிலிருந்து மீட்டெடுப்பதற்கும் என்ன வழி என்று யோசித்தப்போதுதான்.. இயற்கை விவசாயத்தால் உரம், பூச்சிக்கொல்லிச் செலவை சுத்தமாக ஒளித்துவிடலாம் என்று தோன்றியது. இதற்காகவே நம்மாழ்வார் ஐயா நடத்திய பல கூட்டங்களில் கலந்து கொண்டேன். இயற்கை விவசாயிகள் பலரையும் சந்தித்தேன். அவங்களுடன் தங்கி, அவர்கள் செய்யும் விவசாயத்தைப் பார்த்து, தொழில் முறையாக எப்படி செய்யலாம் என்று தெரிந்துகொண்டேன்.

இணைத்த இயற்கை!

அப்போது பன்னாட்டு கம்பெனியில் வியாபார மேம்பாட்டாளராக நான் இருந்தேன். அங்கு என் நண்பர்களுடன் பேசியதில்.. நிறைய பேருக்கு இதில் ஆர்வம் இருப்பது தெரிந்தது. அவர்களையெல்லாம் இணைத்து… இந்த அமைப்பைத் தொடங்கினோம். முதல் கட்டமாக, சென்னை மக்களுக்கு ரசாயனம் தெளிக்காத கீரையை உற்பத்தி செய்து கொடுக்கலாம் என்று முடிவு செய்தோம். அதற்காக, இந்த 5 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து கீரை சாகுபடியைத் தொடங்கியிருக்கிறோம். விளையும் கீரையை சென்னையில் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்கிறோம்.

மொத்தமிருக்கும் 12 உறுப்பினர்களில்… நான்கு பேர் முழுநேரமாக செயல்படுகிறோம். இதற்காகவே.. ஏற்கனவே நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டோம். (ஜெகந்நாத், ராதாகிருஷ்ணன், ஆகிய இருவரும் மருத்துவ நிறுவன அதிகாரிகளாகவும்… கௌதம், மின்சாதனங்கள் தயாரிக்கும் நிறுவன நிதி ஆலோசகராகவும், சலோமி ஏசுதாஸ் ஆந்திர மாநிலத்தில் இருக்கும் டெக்கான் டெவலப்மெண்ட் சொஸைட்டி தொண்டு நிறுவன திட்ட அதிகாரியாகவும் பணியாற்றி வந்தனர்). மற்ற உறுப்பினர்கள்… வாரம் ஒரு முறை வருவாங்க. மாதம் ஒரு முறை கூட்டம் நடத்துவோம். அவங்கவங்க ஆலோசனைகளைப் பரிமாறிக்குவோம். இயற்கை உரத் தேவைக்காகவே நாட்டு மாடுகளை வளர்க்கிறோம். இப்போதைக்கு எட்டு மாடுகள் இருக்கிறது. இயற்கை முறையில் விளைந்த பொருட்களை விற்பதற்காக.. ‘நல்ல சந்தை’ என்று ஒரு அமைப்பையும் தொடங்கப் போகிறோம். இயற்கை விவசாயிகள், அத்தனைப் பேருமே பயன்படுத்தும் வகையில் லாபநோக்கம் இல்லாமல் இதை நடத்தப் போகிறோம் என்றார் ஜெகன்னாதன்!

கீரையில் சின்னச்சின்ன ஓட்டைகள் இருந்தால்கூட பூச்சிக் கீரை என்று சொல்லி வாங்க மாட்டேங்கறாங்க. சிலர், இயற்கை முறையில் விளைவிக்கும் போது சில நேரங்களில் கீரைகள் இப்படித்தான் இருக்கும். அதனுடன், பூச்சிகள் சாப்பிட்ட கீரைகளை சாப்பிடுவதால் எந்த பாதிப்பும் இல்லை என்பதுதான் உண்மை. பூச்சிகள் சாப்பிட்டிருந்தால்.. அது இயற்கையில் விளைந்த கீரை என்று நம்பி வாங்கலாம். ரசாயனப் பூச்சிக் கொல்லி தெளிக்கும் வயல்களில் இருந்து வரும் கீரைகள்தான், பெரும்பாலும் ஓட்டை இல்லாத கீரையாக இருக்கும். பொதுவாக காய்கறி, கீரை, பழம் என்று எல்லாவற்றிற்குமே சீசன் இருக்கு. அந்தந்த சீஸனில்தான்.. அதெல்லாம் நன்றாக விளையும். அப்படிப்பட்ட காய்கறிகளை, இயற்கை முறையில் எளிதாக விளையவைக்க முடியும். ஒவ்வொரு சீஸன்லையும், மனிதனுக்கும் விலங்களுக்கும் என்னென்ன தேவைப்படும் என்று இயற்கையே செய்திருக்கும் ஏற்பாடுதான் இது. அதனால், அந்தந்த சீஸனில் விளைவதை மட்டும் வாங்கிச் சாப்பிடுவதுதான் நல்லது. இந்த உண்மை புரியாமல், பலரும் சீஸன் இல்லாத சமயங்களில் கூட அந்தக் காய்கள்தான் வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிறார்கள் என்றார்.

விதவிதமாக இருக்கிறது, கீரை!

முளைக்கீரை, சிகப்பு முளைக்கீரை, சுக்கான், சக்கரவர்த்தினி, பசலைக் கீரை, அரைக் கீரை, சிறுகீரை, கொத்தமல்லி, புதினா, பொன்னாங்கன்னி, சிகப்பு பொன்னாங்கன்னி, கோங்கரா என்று சொல்லும் சீமைக் காசினி, கொம்புக் காசினி, அகத்தி, முருங்கை, வல்லாரை, தூதுவளை, முடக்கத்தான், வெந்தயக் கீரை, கல் இளக்கி, காசினி, கறிவேப்பிலை, மணத்தக்காளி, தண்டுக்

கீரை, திருநீற்றுக் கீரை இப்படி முப்பதுக்கும் மேற்பட்ட கீரை வகைகளை சாகுபடி செய்கிறோம். ஒரு பாத்தி அமைக்க, 200 ரூபாய் செலவாகும். முதல் கட்டமாக, நாங்க மொத்தம் 50 சென்ட் நிலத்தில் 300 பாத்திகள் அமைத்திருக்கிறோம். இதை ஒரு முறை அமைத்தால்... மூன்று, நான்கு முறை சாகுபடி செய்யலாம். ஒரு பாத்தியில் அதிகபட்சம், 100 கட்டு கீரை பறிக்க முடியும். ஒரு கட்டுக்கு 5 ரூபாய்க்கு குறையாமல் விலை கிடைக்கும். பாத்திகளுடைய இடைவெளியில் அகத்தி, வல்லாரை, தூதுவளை, பிரண்டை மாதிரியான பயிர்களைப் போட்டிருக்கிறோம். வேலைக்கு 2 பேர் இருந்தால் போதும். 300 பாத்தியிலிருந்தும் மாதத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைத்து கொண்டிருக்கிறது.

ஒரு பானை சோற்றிற்கு, ஒரு சோறு பதம் போல், 50 சென்ட் நிலத்தில் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டோம். இந்த அனுபவத்தை வைத்தே... கீரை சாகுபடியை விரிவுப்படுத்தப் போகிறோம். அதே போல், வேறு சில பயிர்களையும் கையில் எடுக்கப் போகிறோம். இதன் மூலமாக மொத்தமாக இருக்கும் 5 ஏக்கரிலிருந்தும், ஒவ்வொரு மாதமுமே.. பல லட்ச ரூபாய் வருமானம் கிடைக்கும். முறையாக திட்டம் போட்டு உழைத்தால், விவசாயமும், மற்ற தொழில் மாதிரி லாபம் கொட்டும். ஏற்கனவே நாங்கள் பார்த்துக் கொண்டிருந்த வேலையில் கிடைத்த சம்பளத்தைவிட, இன்னும் கூடுதலாக விவசாயத்தின் மூலமே லாபம் பார்க்க முடியும் என்பதை நிரூபித்தே தீருவோம் என்றார்.

தெளிப்புப் பாசனம்தான் நல்லது!

கீரை சாகுபடிக்கு கௌதம் சொல்லும் சாகுபடி முறை!

கீரை சாகுபடிக்கு மேட்டுப்பாத்தி முறைதான் சிறந்தது. சாகுபடிக்குத் தயார் செய்த நிலத்தில், 30 சதுர அடிக்கு ஒரு பாத்தி என்கிற அளவில் அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கு இடையிலும் நடந்து செல்ல வசதியாக, இடைவெளி விட வேண்டும். பாத்தியைச் சுற்றி செங்கல் அல்லது ஓடுகள் மூலமாக அரண் அமைத்துக் கொண்டால், இடும் தொழுவுரம் கீழே சரியாது. பாத்திக்குள் நன்றாகக் கொத்திவிட்டு, அரையடி உயரத்திற்கு மேடாக்கி, ஒரு கூடை எருவை விதையோடு சேர்த்துத் தூவ வேண்டும். ஒரு பாத்தியில் தூவிய ரகத்தை அடுத்தப் பாத்தியில் தூவக் கூடாது. ஒரே ரகத்தைப் போட்டால், நோய் தொற்று ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனால், முதலில் தூவிய ரகத்தை மூன்று பாத்திகள் தள்ளித்தான் தூவ வேண்டும். மேட்டுப்பாத்தியில் கீரை உற்பத்தி செய்ய... தெளிப்பு நீர்ப் பாசனம்தான் சிறந்தது. இம்முறையில் சீக்கிரம் விதை முளைக்கத் தொடங்கும்.

அதிக நாட்கள் காத்திருக்கத் தேவையில்லை!

வெந்தயக் கீரை 15 நாட்களிலும், சிறுகீரை, பருப்புக் கீரை ஆகியவை 20 நாட்களிலும், முளைக்கீரை, சிகப்பு முளைக்கீரை, தண்டுக்கீரை ஆகியவை 30 நாட்களிலும், கொத்தமல்லி 40 நாட்களிலும், வல்லாரை, பொன்னாங்கன்னி ஆகியவை 60 நாட்களிலும் அறுவடைக்கு வரும். பசலை, சுக்கான், காசினி, புளிச்சக்கீரை, மணத்தக்காளி, முருங்கை, கறிவேப்பிலை ஆகியவை 6 மாதத்தில் அறுவடைக்கு வரும். கீரைகளைப் பெரும்பாலும் நோய்கள் தாக்காது. ஆனால், பூச்சித் தாக்குதல் இருக்கும். கீரைப் பாத்திகளுக்கு அருகில் சாமந்தி, ஆமணக்குச் செடிகளை நட்டு வைத்தால் பூச்சிகள் வராது. அதையும் மீறி பூச்சித்தொல்லை இருந்தால்... மஞ்சள் நிற

டப்பாக்களில் கிரீஸ் தடவி, பாத்திகளின் அருகில் போட்டுவிட்டால் போதும். பூச்சிகள் அதில் ஒட்டிக்கொள்ளும். கீரைகளுக்கு வளாச்சி ஊக்கியாக அமுதக்கரைசல், பஞ்சகவ்யா ஆகியவற்றை தேவையான அளவு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தொடர்புக்கு
ஜெகன்னாதன், செல்போன் : 99626 – 11767
கௌதம், செல்போன் : 98406 – 14128
ராதாகிருஷ்ணன், செல்போன் : 97898 – 40630

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.01.13** www.vikatan.com